**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR**

| | | |
|---|---|---|
| CC. | : | 584 / 2024 |
| Deposition of Witness for | : | PW. 5 (LW-3 ) |
| Name | : | ராஜ்குமார் |
| Father's Name | : | ராஜலிங்கம் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |
| Accused | : | எதிரி ஆஜர் |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1973 of that 24th day of November 2025.**

**முதல் விசாரணை**:

நான் பஞ்சப்பட்டியில் வசித்து வருகின்றேன். நான் கட்டிடம் உடைக்கும் வேலை செய்கின்றேன். 19.07.2021-ம் தேதியன்று நானும், எனது அண்ணன் வடிவேல் என்பவரும் கரூருக்கு வேலைக்கு சென்றோம். மாலை 7.30 மணியளவில் புலியூரிலிருந்து உப்பிடமங்கலம் நோக்கி வடக்கிலிருந்து தெற்கு நோக்கி எனக்கு சொந்தமான இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம். அப்போது தமிழ்நாடு அரசு பேருந்து எங்களுக்கு முன்னால் அதிவேகமாக சென்றது. அந்த பேருந்தின் பதிவு எண்.TN 38 N 3258 ஆகும். அந்த பேருந்துக்கு முன்னால் TN 48 AY 8950 என்ற இரு சக்கர வாகனம் சென்று கொண்டிருந்தது. பேருந்து வேகமாக சென்று இடது புறமாக திருப்பி இரு சக்கர வாகனத்தில் மோதியதால் அதில் பயணம் செய்த அபிமணி என்பவரும், பிரதிபா என்பவரும் பலத்த காயம் அடைந்தார்கள். நானும், வடிவேல் என்பவரும் ஓடிச்சென்று பார்த்தோம். அபிமணி என்பவருக்கு வயிற்று பகுதியிலும், வலது கையிலும் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. பிரதிபா என்பவருக்கும் கண்ணுக்கு மேல் காயம் ஏற்பட்டிருந்தது. அவர்களை ஆம்புலன்ஸ்

வரவழைத்து அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூாி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். விபத்து குறித்து அபிமணி என்பவரின் தகப்பனார் குமார் என்பவருக்கு நான் தகவல் தெரிவித்தேன். பேருந்தை ஓட்டிய நபரை நான் பார்க்கவில்லை. அவசரமாக இருந்ததால் அவரை நான் கவனிக்கவில்லை. அபிமணி என்பவர் விபத்தில் ஏற்பட்ட காயங்களால் இறந்துவிட்டார் என்று பின்பு தெரியவந்தது. வெள்ளியணை போலீசார் வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்தார். பேருந்தை ஓட்டிய நபரின் அஜாக்கரிதையால்தான் விபத்து ஏற்பட்டது.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இறந்துபோன அபிமணி என்பவர் எனது உறவினர் என்றால் சரிதான். நான் பயணம் செய்த இரு சக்கர வாகனத்தின் பதிவு எண். TN 47 AW 1411 ஆகும். விபத்து நடைபெற்ற இடம் வாகன போக்குவரத்து அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். விபத்து நடைபெற்ற இடத்திற்கு முன்பாக வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். விபத்து நடைபெற்றவுடன் அதிக கூட்டம் கூடிவிட்டது என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக நான் காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவித்தேன். காயம்பட்ட நபர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தேன். நான் ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு செல்லவில்லை. வழக்கு சம்பந்தமாக புகார் கொடுத்த நபரை எனக்கு தெரியாது. வழக்கு சம்பந்தமாக காவல்நிலையத்தில் வைத்து போலீசார் என்னை விசாரித்தார்கள். 20.07.2021-ம் தேதியன்று விசாரித்தார்கள். நான் சென்ற இருசக்கர வாகனத்திற்கும், முன்னால் சென்ற பேருந்திற்கும் சுமார் 10 அடி தொலைவு இருக்கும். சம்பவம் நடைபெற்றபோது இருட்டாக இருநத்து என்றால் சரிதான். பேருந்தின் முன்பக்கம் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். பேருந்தின் முன்னால் விபத்து நடைபெற்றதால் நான் பின்னால் சென்று கொண்டிருந்ததால் நான் விபத்தை நேராக பார்க்க வாய்பில்லை என்றால் சரிதான். நான்

**சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், இறந்துபோனவர் எனது உறவினர் என்பதால்அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.**

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்,<br>கரூர். |